ஞாயிறு வெளியீடு. விலை 0-1-3. REGD. NO. M. 4455

விளம்பர விகிதம்.
இஞ்சு ஒன்றுக்கு 1-0-0.
சர்க்கார் கோர்ட்டு 2-0-0

# திராவிடநாடு

வருடசந்தா ரூ. 5—0—0
ஆறுமாதம் ரூ. 2—8—0
தனிப்பிரதி ரூ. 0—1—3

மலர் 3 | காஞ்சிபுரம் 11—6—44 | இதழ் 14.

சிறு கதை.

## கலியாண வைபவம்!

ஆ. சாந்துஉசேன், கோட்டூர்.

அழகிய கனகாம்பரச் சோலை. அதன் நடுவில் சிறு தடாகம். அதற்குச் சுற்றிலும் பொன்னரளி, மஞ்சள்அரளி, செவ்வரளிச்செடிகள். இதற்கிடையில் ரோஜா, மல்லிகை, முல்லைபோன்ற வாசனைச்செடிகள். இன்னும்அதற்குப் பக்கத்தில் புன்னைமரங்களும் தென்னைமரங்களும்ஓங்கிவளர்ந்துள்ளன. இம்மரங்களில் பட்சிகள் குடிகொண்டுள்ளன. ஆங்காங்கு மயில்கள் பட்டப்பகல்போன்ற நிலாவொளியில் நடனம்புரிந்துகொண்டிருக்கின்றன. தடாகத்திற்குப் பக்கத்திலிருக்கும் பூச்செடிகளில்உள்ள தேனை வண்டுகள் குடித்துவிட்டு இன்பமாக இனிய குரலில் ரீங்காரம்செய்துகொண்டிருக்கின்றன. இளம்தென்றல்இனிதாகத்தடாகத்தினின்றும் வீசிக்கொண்டிருக்கிறது. அத்தடாகத்தின் அருகில் சிறியமேடை ஒன்றுஇருக்கின்றது. அதன் ஒருமூலையில் அழகிய யவ்வனஸ்திரி ஒருவள் தனது முழங்காலில் கையைக்கட்டிக்கொண்டு ஏதேதோ முணுமுணுத்துக்கொண்டிருக்கிறாள். அந்தப் பெண்யார்? அவள் ஏன் அங்கு வீற்றிருக்கவேண்டும்? அவள்என்ன கூறுகின்றாள்?

"காதல் என்னைவாட்டுகிறது. மனம் தத்தளிக்கின்றது. மனம் தனிமையான இடத்தைநாடுகிறது. நித்திரைகொள்ள முடியவில்லை. பலவந்தமாகக் கண்ணை மூடினாலும் நித்திரை வருவதில்லை. அப்பொழுதுதான் என் கண்முன் காதலன் உருவம் மாறி மாறித்தோன்றி என்னை வதைக்கின்றது.

இதுஎன்ன சமுகம்! என்னே சமுகத்தின் கொடுமை! இளம் காதலர்களை அதும் மனமொத்த காதலர்களை பிரிக்க வைக்கும் சமுகம் ஓர்சமுகமா? நான்மனமாரக்காதலித்தபுருஷனை, மணம் புரியக்கூடாதாம்! ஐயோ! பாழும் சமுகம் அல்லவா குறுக்கே நிற்கின்றது! சமுகக்கட்டுப்பாடுகளெல்லாம் என்று தொலைகின்றதோ அன்றல்லவா தேசம் முன்னேற்றம்அடையும்!

நான் உண்மையாகக் காதலிக்கும் "ராமு"க்குஎன்னைக் கலியாணம்செய்து கொடுக்கமுடியாது என்று தந்தை கண்டிப்பாகச்சொல்லிவிட்டாராம். அவர் ரக்ஷயாவின் பொதுஉடைமைக் கட்சிக்காகச் சிறைசென்றாராம். அதனால்அவர் மகாசண்டாளனாம். ஐயோ! என்வயிறு எரிகின்றதே! என்தந்தையும் ஓர்தந்தையா? பெற்றோர்களைப் பழிப்பதில் பயன்யாது? என்று கூறிக்குமுறுகிறாள்.

"இன்னும் எத்தனையோ ஆடவர்கள் இருந்தும் உன்மனம் ஏன் அவனிடம் சென்றது?" என்று கேட்கிறாள் தங்கை லக்ஷ்மி. பாவம்! அவள் உலகம் அறியாதவள்! என்மனம் அவர்பால் எப்படிச் சென்றது என்று எனக்கே தெரியவில்லையே! ஆனால்என்மனம்வேறு ஒருவரைக் காதலிக்கும் என்று எனக்கு நம்பிக்கை இல்லை" என்கிறாள் காதலால்தாக்குண்ட காரிகை.

"என்னை இங்குவரச்சொன்ன ராமு இவ்வளவுநேரம் ஆகியும் வரவில்லையே! ஒருவேளை வருவாரோ! அல்லது வரமாட்டாரோ! அப்படி வராமல்இருக்கமாட்டாரே! என்னசெய்வேன் ஏன்இன்னும் தாமதம்?"

இவ்விதம் புஷ்பவல்லி தவித்துக்கொண்டிருக்கும்போது தூரத்தில் நிலா ஒளியில் யாரோ ஒருவரின்உருவம் தென்பட்டது. அதுமேடைப்பக்கம் வந்துகொண்டிருந்தது. ஆனால் அந்த உருவம் தன்னை யாராகிலும் பார்த்துவிடுவார்களோ என்று பயந்து அடிக்கடி திரும்பிப்பார்த்துக்கொண்டேவந்தது. அடுத்த விநாடியே ராமு அவளருகில் தோன்றினான். சிறிதுநேரம் ஒருவரும்பேசவில்லை. இருவர் மனமும் குழம்பிக்கொண்டிருந்தது. ஆனால் "எப்படிப்பேசுவது? என்ன பேசுவது?" என்றுஒருவருக்கும் தோன்றவில்லை. கடைசியில் புஷ்பவல்லி, "என் மனதை நீங்கள் இன்னும் சோதிக்கிறீர்கள் போலும்! தாங்கள் இவ்வளவு நேரம்தாமதித்ததினால் என் உயிர் அப்படியே துடிதுடித்து விட்டது," என்று கண்களில் நீர்ததும்ப விசனத்துடன் கூறினாள்.

"அடடடா! இதற்காகவா அழுகிறாய்! நான் சொன்னவார்த்தைகளில் இதுவரை தவறுதலாக நடந்திருக்கிறேனா? வரும்வழியில் உன் அண்ணன் ராஜுவைப்பார்த்தேன். அவனிடம் சில முக்கியமான விஷயங்களைப்பற்றிப்பேசிக்கொண்டிருந்தேன், முடிந்ததும் வந்துவிட்டேன்!" என்றுகூறினான் ராமு.

"உங்களிடத்தில் சில வார்த்தைகள் சொல்லவேண்டும் என்று நீங்கள் வந்ததிலிருந்துகாத்துக்கொண்டிருந்தேன். இன்றைக்குத்தான் நல்லநேரம் வந்திருக்கின்றது. நீங்களும் "ராஜு" அண்ணாவும் என்கலியாணத்தை நிறுத்திவிடுவதாகத் தெரிந்ததும், என்மனம் சிறிதளவு சந்தோஷப்பட்டது. கலியாண ஏற்பாடுகளெல்லாம் ஏகதடபுடலாக நடக்கின்றன; முகூர்த்தநாளும் நெருங்கிவிட்டது. ஆகையால் இனித்தாமதிக்காமல் நாம் எங்கேயாவதுசென்று விவாகம்செய்துகொண்டு சுகமாகவாழலாம். நீங்கள் இதை எப்படியாவதுமுடித்தேதீரவேண்டும். இல்லைஎன்றால் என்உயிரை........." என்று அழுதாள். அத்துடன் பேச்சும் நின்றுவிட்டது.

"புஷ்பவல்லி! உன்னை நான் ஒருபொழுதும் கைவிடமாட்டேன். இதை நிச்சயமாய் நம்பு. நீ இனிக் கொஞ்சம் கூட வருத்தப்படவேண்டியதில்லை. வா போகலாம்," என்று கையைப்பிடித்திழுத்துக்கொண்டு வீட்டிற்குச்சென்றான்.

சுப்பிரமணிய ஜோதிடர் ஒரு பழுத்த வைதிகர். பழைய ஆச்சாரஒழுக்கங்களினின்றும் ஒருசிறிதும் தவறமாட்டார். நல்லபெயர்வாங்கினவர். இவரைப்பற்றித் தெரியாதவர் ஒருவருமிலர் என்றேசொல்

(2-ம் பக்கம் பார்க்க)

# கலியாண வைபவம்!

1-ம் பக்கத்தொடர்ச்சி

லலாம். அவருக்குஒருபெண் புஷ்பவல்லி. அவளைத்தவிர "ராஜு" என்ற அண்ணன் ஒருவன் உண்டு. அவன் பி, ஏ; (B. A;) பாஸ்செய்துவிட்டு பாங்கியில் ஒரு மானேஜராக வேலைபார்த்து வந்தான. அந்த பாங்கிக்கு எதிர் வீட்டில் ஒருகடிகாரக் கம்பெனிஇருந்தது. அதில் ஜோதிடர் வீட்டுக்குப் பக்கத்துவீட்டு "ராமு" வேலைபார்த்துவந்தான். ராமுவும், ராஜுவும் இணைபிரியாத நண்பர்கள். தவிர ஒரே வகுப்பில் படித்தவர்கள்.

ராமு, ராஜுவீட்டுக்கு அடிக்கடி வருவதுண்டு. சிலசமயங்களில் புஷ்பவல்லியுடன் தமாஷாகப்பேசுவதுண்டு. இவர்களுடைய நட்பைக்கண்ட புஷ்பவல்லியின் தாயார் தக்கபருவத்தில் "ராமு"க்கு கலியாணம் செய்துகொடுக்கவேண்டும் என்று சொல்லுவதுண்டு. அப்பொழுது அக்குடும்பத்தைச்சார்ந்த அனைவரும் அதேஅபிப்பிராயம் கொண்டிருந்தனர்.

ரஷ்யப் பொதுஉடைமைக் கட்சியைப்பற்றிப் பிரசங்கம்செய்ததின்காரணமாக 'ராமு" ஆறுமாதம் கடுங்காவல் கண்டனை அடைந்தான்.

பரமவைதிக வழக்கத்தைக் கையாண்டுவரும் சுப்பிரமணிய ஜோதிடர் "ராமு"க்குத் தன்ஒரேபெண்ணை (புஷ்பவல்லியை) கலியாணம்செய்துகொடுக்க மறுத்துவிட்டார். அநேகர் அவனுக்குப் பெண்கொடுக்கச்சொல்லித் தூண்டியும் அவர் பழைய பல்லவியே பாடிவந்தார்.

நாட்கள் பல சென்றன. யாரோவஞ்சிபுரம் மிட்டாதாராம், பெரியசொத்தாம், வயது ஐம்பத்தைந்துக்குச் சற்றுஅதிகம் இருக்குமாம். மூன்றும்தாரமாகப் புஷ்பவல்லியை அவருக்குக்கொடுக்கத் தீர்மானித்திருக்கிறேன் என்று ஜோதிடர் தன்மனைவியிடத்தில் சொல்லிக்கொண்டிருப்பதைப் புஷ்பவல்லி மறைவாக நின்றுகேட்டுவிட்டாள், பதறினாள்.

ஒருநாள் ஜோதிடர் வஞ்சிபுரத்து மிட்டாதாரரைப்பற்றிஅவளிடத்தில்பிரஸ்தாபித்தார். அப்போது புஷ்பவல்லி "அப்பா! நான் கலியாணம் செய்துகொள்வதாகஇருந்தால் "ராமு"வைத்தான் செய்துகொள்வேன். இல்லையேல் வேறுயாரையும் செய்துகொள்ளமாட்டேன், நீங்கள் வேறுயாருக்காவது என்னைக்கலியாணம் செய்துகொடுக்கத்தீர்மானித்தீர்களானால் என்னை மணக்கோலத்திற்குப் பதில் பிணக்கோலத்தைப்பார்த்து வருத்தம்அடைய நேரிடும் என்று பதிலுரைத்தாள்.

சென்னையில் ஒருநாள் ராஜு கன்னத்தில் கையைவைத்துக்கொண்டு விசனத்துடன் 'பீச்'சில் உட்கார்ந்துகொண்டிருந்தான். ராமு உல்லாசமாக நடந்துகொண்டிருந்தவன் திடீரென்று ராஜு ஆழ்ந்தயோசனையில் அமர்ந்திருப்பதைப் பார்த்து அவன்பக்கத்தில் சென்று "என்னடா ராஜு! கப்பல்ஏதாகிலும்கவிழ்ந்துவிட்டதா என்ன! கடற்கரையில் கன்னத்தின்மீது கையைவைத்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறாயே! என்ன நேர்ந்தது? சொல்லேன் நானுந்தான் அதைக்கேட்டுக்கொள்ளுகிறேன் என்றான். ராஜு தன்கையிலிருந்த கடிதத்தை ராமுவிடத்தில் கொடுத்தான். அதில் கீழ்க்கண்டவாறு எழுதியிருந்தது.

"குமாரன் ராஜுக்கு அநேக ஆசீர்வாதம். உன்தங்கை புஷ்பவல்லிக்கும் (பெரியபட்டி)தீனதயாளனுக்கும் மணம் செய்துகொடுக்கத் தீர்மானித்துள்ளேன். வெள்ளிக்கிழமை முகூர்த்தம். நீயும் உன் சிநேகிதர்களுடன்லீவுஎடுத்துக்கொண்டு சீக்கிரம் வந்துசேரவும்.

இப்படிக்கு,

சுப்பிரமணிய ஜோதிடர்.

அதைப்படித்தான் ராமு. கண்களில் நீர் தாரை தாரையாகப் பெருகிற்று.பாழுங்கிணற்றில் அல்லவா தள்ளப்பார்க்கிறார்கள். கிளியை வளர்த்துப் பூனை கையில்கொடுத்ததுபோல் ஆயிற்று இவர்கள் செய்யப்போகும் முட்டாள்தனமானகாரியம்.

சே! என்ன உலகம்! கண்தெரியாத உலகம்! இதைஇவ்வாறு விட்டுவிடக் கூடாது. எப்படியாவதுஒருவழிசெய்தே தீரவேண்டும். இதற்கு என்ன சொல்லுகிறாய் என்று ராஜுவிடத்தில்கேட்டான் ராமு.

உடனே ராஜு அவன் முகத்தைப் பார்த்து,செய்வதென்ன! கலியாணத்தை நிறுத்தியேதீரவேண்டும். என்தங்கையை இம்மாதிரி கதிக்குள்ளாகும்படிவிட ஒருக்காலும் சம்மதிக்கமாட்டேன். என் அருமைத் தங்கைக்கு இக்கதியா வரவேண்டும், என்று அழஆரம்பித்துவிட்டான். ராமு, நண்பன் ராஜுக்கு அநேகசமாதானம் கூறினான். அவன் மனமும் சற்று நிம்மதியடைந்தது.

ராமு பின் தன்நண்பனிடத்தில் புஷ்பவல்லியின்மீதுதான் அளவுகடந்த பிரேமை வைத்திருப்பதாகவும்,அவளும்தான்வைத்திருப்பதுபோன்று பிரேமை வைத்திருக்கிறாள் என்று தன்மனதில் உள்ளதை உடைத்துச்சொன்னான். இவ்வார்த்தைகளைக்கேட்ட ராஜு சிரித்தமுகத்துடன் பழம் நழுவிப்பாலில் விழுந்தாப்போல் ஆயிற்று என்றுசொல்லி 'போகலாம்வா' என்று கையைப்பிடித்துக்கொண்டு வீட்டிற்குவந்து பலவாறு யோசனைசெய்து கடைசியாக ஒரு தீவிரமுடிவுக்கு வந்துவிட்டனர். மறுநாள் காலை ரயிலுக்குப் புறப்பட்டு அன்று சாயங்காலம் ஊர்வந்து சேர்ந்தனர்.

அடுத்த நாள் காலை சுமார் பதினொரு மணி இருக்கலாம். புஷ்பவல்லி தன்வீட்டின் ஜன்னல் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு வெளிப்பக்கமாகப் பார்த்துக்கொண்டிருந்தாள். அப்பொழுது ராமு ஓர் கடிதத்தை எழுதி அவசரமாகக் கொண்டுவந்து ஜன்னல் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டிருக்கும் புஷ்பவல்லியிடம் கொடுத்துவிட்டுப்போய்விட்டான். புஷ்பவல்லி அக்கடிதத்தை ஒருவருக்கும் தெரியாமல் மடியில்வைத்துக்கொண்டு தனது சயனஅறைக்குச்சென்று கதவைத்தாளிட்டுக்கொண்டு ராமுகொடுத்த காகிதத்தைப்பிரித்து படிக்கலானாள்.

ஆருயிர் புஷ்பத்திற்கு,

உன் ஆருயிர்காதலன் ராமு எழுதிய லிகிதம் என்னவென்றால், நீ இன்றுஇரவு சுமார் 10-மணிக்கு என்னைக் கனகாம்பரச்சோலையில் அவசியம் சந்திக்கவும். உன்னிடத்தில் சிலமுக்கியமான விஷயங்களைப்பேசவேண்டும். வரமறந்துவிடாதே, மற்றவை நேரில்.

இப்படிக்கு,

ஆருயிர் காதலன் ராமு.

என்று பொறிக்கப்பட்டிருந்தது. அக்கடிதத்தைப் படித்ததும் புஷ்பவல்லி அளவில்லா ஆனந்தம் அடைந்தாள்.

இந்நிகழ்ச்சிதான் நாம் முன்புகூறிய அந்த அழகிய கனகாம்பரச்சோலையில் நடந்த சம்பவங்கள்.

நாட்கள் இரண்டு மூன்று கழிந்தன. புஷ்பவல்லிக்கும் தீனதயாளனுக்கும் நடக்கப்போகும் கலியாணமுகூர்த்தம்அடுத்துவிட்டது. கலியாணத்தைத் திண்டிவனத்தில் நடத்துவதாகத்தீர்மானித்துப் பத்திரிகைமூலம் எல்லோருக்கும் தெரிவித்தாகிவிட்டது. மறுநாள் வியாழன், எல்லோரும் திண்டிவனத்திற்குப்போகப் பெண்வீட்டில் தயாராக இருக்கிறார்கள். அப்பொழுது தந்திச் சேகவன் ஒருவன் அவசரமாகஓடிவந்துகீழ்க்கண்டதந்தியை சுப்பிரமணிய ஜோதிடர்கையில் கொடுத்தான். அவர் அதை அதிகஆவலுடன் படித்துப் பார்த்தார்.

தீனதயாளன் மாரடைப்பால் மாண்டார். ஈமக்கிரியைக்கு வந்துசேரவும்.

இப்படிக்கு,

காரியதரிசி, முத்துப்பிள்ளை.

என்று இருந்தது, இதைப்படித்த சுப்பிரமணிய ஜோதிடர் வயிறு வயிறுஎன்று அடித்துக்கொண்டார். பின் எல்லோருக்கும் விஷயம்தெரிந்தது. விருந்தினரில் சிலர் ஊருக்குப் புறப்பட்டனர்.

(7ம் பக்கம் பார்க்க)

# புன்னகையும் பெருமூச்சும்.

C. N. A.

"இராமாயணத்தைக் கண்டித்துப் பேசுகிறீர். இராமனைத் தெய்வமல்ல என்று கூறுகிறீர். அப்படிப்பட்ட நீர், ஏன் உமது பெயரை இராமசாமி என்று வைத்துக்கொண்டிருக்கிறீர்"

இது, நாம் அனைவரும் அறிந்த கேள்வியே. ஆரியரும் அவர்தம் அடிவருடிகளும், பகுத்தறிவுத் தந்தை பெரியார் இராமசாமியின் கணைகளால் தாக்குண்டு திக்கு முக்காடும்போது, விடும்கேள்வி என்பதைத் அன்பர்கள் அறிவர், மேதாவித்தனமும் நகைச்சுவையும் அக்கேள்வியிலே ததும்புவதாக எண்ணம் அப்பாவிகளுக்கு, வாதங்கட்குப் பதில்கூற வகையற்றவேளையிலே, இவ்வாயுரையால் மீளலாம் என்பது அவர்தம் எண்ணம். இதுபோலப்பல கூட்டங்களிலே, கேள்விகள் பிறந்ததுண்டு.

ஆனால் நான் குறிப்பிட்டுள்ளது, பெரியார் இராமசாமியை, யாரோ கேட்ட கேள்வியல்ல!!

வேறுயார்மீது பூட்டப்பட்டபாணம் இது என்று கேட்பீர்கள். யார்மீது என்று என்னைக் கேட்பதற்கு முன்னம் சற்றே சிந்தனையைச் செலவிட்டால், கேள்வியாரிடம் கேட்கப்பட்டதோ அவருடைய பெயரும் இராமசாமியே என்பதும், அவரும் நமது பெரியார் போலவே பழமையைச் சாடிடும் பண்பினர் என்பதும் தெரியவரும்.

கேள்விக்கு அவர் அளித்தபதில் என்ன தெரியுமோ!

"இராமாயணத்தை நான் கண்டிப்பது உண்மை. இராமனை ஒரு ஆரியன் என்றுரைப்பதும் உண்மையே. என் பெயரும் இராமசாமியே! இதிலேதவறு எங்கேஉளது" என்றுகேட்டார் இராமசாமி.

"இராமனைக் கண்டித்துப்பேசும் உமக்கு அதே இராமநாமம் இருக்கலாமோ?" என்று மடக்கினார் கேள்வி கேட்டவர். சடக்கெனப்பதில் உரைத்தார் இராமசாமி. "ஐயா! சாமி என்றால் எஜமானன் என்றோர்பொருள் உண்டல்லவா? என்பெயர் இராமசாமி, நான் இராமனுக்கு எஜமானன்!"

இவ்விடை, கோபத்தைத்தர, கேள்வி பூட்டியவர், இராமசாமியைமேலும் வைதார்—மனதிற்குள்!!

வைதிகர்களும் பழமை விரும்பிகளும், பார்ப்பனர்களும் மதப்பித்தர்களும், எவ்வளவோ கண்டித்தும், துளியும் கலங்காமல், கடைசிவரை, வீரத்திராவிடராகவே, வீறுகொண்ட திராவிடராகவே வாழ்ந்து ஓராண்டுக்கு முன்பு இறந்துபட்டார், இராமசாமி, நமது இயக்கத்தளபதி. அவருடைய நினைவுக்குறியாக ஓர் கழகம், அதன் திறப்புவிழாவிலே கலந்துகொண்டு 4, 5-ந் தேதிகளிலேசொற்பொழிவாற்றினர் பெரியார் இராமசாமி, நாகட்லா என்ற ஆந்திரநாட்டுக் கிராமத்திலே.

ஆந்திரநாட்டிலே அஞ்சாது தன்மானப் பணியாற்றிய பாரிஸ்டர் இராமசாமிச் சௌத்ரி அவர்களின், புகழும் பணியின்திறமும், தமிழகம் இதுவரை அறியாமற்போனதும், அவருடையபடையும் பெரியாரின் படையும், கூட்டுப் படையாகிக் களத்திலே நிற்கமுடியாமற் போனதும், திராவிடத்துக்குப் பெருநஷ்டம். சென்னைக்கும் பாரிஸ்டர் இராமசாமி பிறந்துவளர்ந்து பணிபல புரிந்து வந்த தெனாலிக்கும் இடையே 300மைல்கள்கூட இல்லை. ஆனால் ஆரியப்பத்திரிகைகள் இந்த இருபடைகளும் ஒன்று சேரவிடாமல் துண்டித்துவைத்தன, எனவே தான், பாரிஸ்டர் இராமசாமியால் திராவிடம் முழுப்பயனையும் பெறமுடியாமல் போய்விட்டது. ஆரியப் போர்முறையே இதுதான், திராவிடப்படை வரிசையிலே சாமர்த்தியமாகப் பிளவுகளை உண்டாக்கி விடுவது, பிறகு பிளவுபட்டபடைகள் ஒன்றுசேரவிடாமல் பார்த்துக்கொள்வது. திராவிடச் சமுதாயத்திலே எண்ணற்ற பிரிவுகள்ஏற்பட்டது இந்தப்போர் முறையின் பயனாகத்தான். ஆரியத்தின் படையோ சங்கிலி கோர்த்தாய்போல இருக்கும், நகைச்சுவையுடன் பெரியார் கூறுவாரே அதுபோலக்கன்னியாகுமரியிலுள்ள ஒரு பார்ப்பனனுக்குத் தேள் கொட்டினால் இமயமலையிலுள்ள பார்ப்பானுக்கு நெறிகட்டும்! நம்மாலோ, நமக்கு அருகிலே இருந்துகொண்டு, நாம் எக்கொள்கைக்காகப் பணியாற்றுகிறோமோ அதேகொள்கைக்காக அரும்பாடுபட்ட தெனாலிஇராமசாமிச்சௌத்ரியின் கூட்டுறவைப்பெறமுடியாமல்போய் விட்டது.

செல்வாக்குள்ள குடும்பத்திலே பிறந்து சீமைசென்று பாரிஸ்டர் படிப்பைமுடித்துத் தாயகம் திரும்பியதும் வேலைக்கு மனுப்போடாதுவாழ்ந்து, வீழ்ந்த திராவிடத்தை வீறுகொண்டெழச்செய்து, ஆரியத்தை அழிக்கஅருஞ் சமர்புரிந்தவர், பாரிஸ்டர் இராமசாமி. பழமை ஒழியவேண்டும்! பார்ப்பனியம் படுசூரணமாகவேண்டும்! பிழைக்கவந்தகூட்டம், பழங்குடியக்களைப் பிடித்தாட்டும் கொடுமைசாயவேண்டும்! பீடைகளை ஏற்றுக்கொண்டு திண்டாடும் வழக்கம்போக வேண்டும். புதுமைமலரவேண்டும். பூசுரக்கூட்டத்தின் கொட்டம் அடக்கப்படவேண்டும். பெண்டுபிள்ளைகளையும இழுக்கச்செய்யும் பேடித்தனத்தையே மதமாகக்கருதும் மடைமைமடியவேண்டும். பேதங்கள் நீக்கப்படவேண்டும். பைத்தியக்காரனுடைய செயல்போன்ற சடங்குகளைத்தொலைக்கவேண்டும். பொல்லாங்குதவிர வேறொன்றுசெய்யத் தெரியாத மாற்றான்முன் மண்டியிடும் மனப்பான்மைமாறவேண்டும். போரிட்டேனும் உரிமையைப்பெறவேண்டும் என்ற எழுச்சி பிறக்கவேண்டும், பௌருஷம் வேண்டும்!

இவை திராவிட இனஎழுச்சியின் பொருட்டு, நாம் கருதும் எண்ணங்கள், இதே போன்றுகருதி, கருதியதைஇனிய எளிய தெலுங்குக் கவிதைகளால் பிரசாரம் செய்து, கவிராஜ் என்று மக்களால் கனிவுடன் அழைக்கப்பட்டு, மக்கள் மனதை மயக்கும் ஆரியப்புராண இதிகாசங்களின் புரட்டுகளை விளக்கிப் புத்தகங்கள் இயற்றி, திருமணத்திலே ஆரியப் புரோகிதமோ, ஆரிய மொழியோ கூடாது என்றுகூறி, அஞ்சாதுஆரியத்தை அடக்கிக்கொண்டு வாழ்ந்தார், பாரிஸ்டர் இராமசாமி.

பார்ப்பனப் பிளேக் பரவுகிறது என்று அறிக்கை விட்டுவிட்டு, பிறகு ஆரியக்குட்டையிலே மூழ்கினாரே சில ஆண்டுகளுக்கு முன்பு, சேலம் பாரிஸ்டர், இராமசாமி என்பார், அவர்போன்றார் அல்ல, இந்த பாரிஸ்டர். இவர் கடைசிவரை திராவிடராகவே வாழ்ந்தார், எக்கஷ்டம் வரினும் வணங்கேன் வேதியக்கூட்டத்தை என்று முழக்கமிட்டார். அதன்எதிரொலி அன்று நாகட்லாவிலே கேட்டது.

நெருப்புச்சட்டியிலே போட்டுவாட்டுவது போன்றிருந்தது பயணம்; மைல்க்கணக்கிலே மண்காற்றுவீசும் பெருவெளிகளையும் கடந்து; நெருப்புக்காற்றைவாரி வாரி வழங்கிக்கொண்டு, கடமையைச் செய்யும் ஒரே குறியுடன் புகைவண்டி, எங்களை ஏற்றிக்கொண்டு சீராளா சென்றது. சீராளா என்றவுடனே, எனக்கேற்பட்டதுபோலவே,உங்கட்கும்சிந்தனைஏற்பட்டுத்தானே தீரும். தொழிலாளர் ஆட்சிக்கே பாடுபடுவோம், 144, 124, முதலிய . சட்டங்களைச்சாய்ப்போம், அடக்குமுறைகளையே ஒழித்துவிடுவோம் என்று ஓட்டு வேட்டையின்போது பேசிய ஆச்சாரியார், ஆட்சியில் அமர்ந்ததும், இதே சீராளாவிலேதான், தொழிலாளத் தோழர்கள்மீது துப்பாக்கிக் குண்டுவீசி, காங்கிரசின் கண்ணியத்தை மக்கள் உணரும்படியான ஆட்சியை நடத்தினார். அந்தச் சீராளாவைக் கண்டதும், என்னையுமறியாமல் ஒரு பெருமூச்சு, சிந்தனை. நெஞ்

(4ம்பக்கம் பார்க்க)

# திராவிட நாடு

காஞ்சி 11—6—44 ஞாயிறு


## இரண்டாம் போர்முனை.

“விட்டேனே பார்! எண்ணி எட்டே நாளில் ரஷ்யாவைப் பிடித்துவிடுகிறேன்! என் சக்திக்குமுன் ரஷ்யா எம்மாத்திரம்!” என்று எக்காளமிட்ட ஹிட்லரின் கொட்டம், செஞ்சேனையால் முறியடிக்கப்பட்டு, “இனி என்னசெய்வது? யாரைத் துணைக்கழைப்பது? நம்பியிருந்த முசோலினியும் நம்மிடமே அடைக்கலம்புகுந்துவிட்டாரே! கைவசமிருந்த படைபலம்-ஆயுதபலம் ஆகியவற்றுள் பெரும்பகுதியைச் செஞ்சேனை விழுங்கி ஏப்பமிட்டுவிட்டதே! ரஷ்யாவிலேதான் இந்தநிலைமை ஏற்பட்டதென்றுபார்த்தாலோ, இதைவிடப் பயங்கரமானசெய்தி இத்தாலியிலிருந்து கிடைத்திருக்கிறதே! “ரோம் வீழ்ச்சி” என்ற ரோமத்தைச் சிலிர்க்கவைக்குஞ்செய்தி என் உள்ளத்தைக் குடைந்து உயிரை வாட்டுகிறதே!’ என்று நாஜித்தலைவன் எண்ணி, ஏங்கி மனவேதனைப்பட்டுவசையும் இவ்வேளையிலே நேசப்படையினர் பிரான்சின் மேற்குக் கடற்கரையோரத்திலே தங்கள் படைஎடுப்பை ஆரம்பித்துவிட்டனராம் என்ற செய்தியும் சுவஸ்திகக் கொடியோன் செவியில் சுருக்என்று தைக்குமானல், ஹிட்லரின் மனக்கோட்டைகள் எவ்வாறு இடிந்து விழுந்துபொடி பொடியாகி இருக்குமென்பதை நேரில்சென்று பார்க்கவேண்டும்? சிறிது சிந்தனைக்கு இடங்கொடுத்தாலேபோதும், ஹிட்லரின் சுயரூபமும் அவர்படும் வேதனையும் நன்கு புலப்படும்.

இப்போது பிரான்சில் துவக்கியிருக்கும் படையெடுப்பை இலேசாக எண்ணிவிடமுடியாது. நேசநாட்டினரின் நீண்டகாலயோசனையும், திட்டமான ஒரு முடிவுக்குவந்த ஏற்பாட்டோடும்கூடியதே இப்படையெடுப்பென்பது நேசநாட்டுத் தலைவர்களின் அறிக்கைகளால் மட்டுமன்றி, அவர்கள் இங்கிலீஷ் கால்வாயில் கொண்டுவந்து குவித்திருக்கும் படைபலத்தாலும் நன்கு தெளிவாகின்றது. ஆறாயிரம் போர்க்கப்பல்களும் அவற்றைப் பாதுகாப்பதற்குப் பந்தலிட்டாற்போன்ற பலஆயிர விமானங்களும் அங்கு உள்ளன என்றசெய்தி எமக்கு அளவற்ற மகிழ்ச்சியைத் தருகின்றது. அதோடு கடந்த மூன்று நாட்களாக நேசநாட்டினர் பிரான்சில் அடைந்துவரும் வெற்றியையும், நாஜிகளுக்கு ஏற்படும் அழிவையும் எண்ணும்போது பின்னும் அதிக மகிழ்ச்சியையே தருகின்றது.

தோழர் ஸ்டாலின் அவர்கள் விரும்பியதுபோல, இப்போது இருபுறத்தாக்குதலும் ஆரம்பமாகிவிட்டதால், இனிநாஜிகளின் தோல்விக்கு அசைவேஇல்லை என்று சொல்லலாம். என்றாலும், அணையும் சமயத்தில் விளக்குச்சுடர் வெட்டெரிந்து திடீரென்று அணைந்துவிடுவது போல, நாஜிகளின் தாக்குதல் மூர்க்கத்தனமானதும் கொடுமையானதுமாகவே இருக்கும். சிலசமயங்களில் “நாஜிகளின் வெற்றி” என்ற செய்தியும்கிடைக்கலாம். ஆனால் இறுதிவெற்றி நேசநாட்டினருக்கே என்பதை உறுதியாகக் கூறலாம். இப்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இரண்டாம் போர்முனை இதைநன்கு உறுதிப்படுத்துகின்றது.

## வாழ்த்துகிறோம்.

இவ்வாண்டுப் பட்டமளிப்புவிழாவிலே நமது கெழுதகை நண்பர்களும், பிரமுகர்கள் பலரும் பட்டங்கள் பெற்றுள்ளனர். சலியாத உழைப்பிலே ஈடுபட்டு, நீதிக்கட்சியின் நிகரிலா எழுத்தாளராகி, “ஜஸ்டிஸ்” பத்திரிகையின் ஆசிரியராக வீற்றிருந்து, ஆரியத்தின் அட்டகாசத்துக்கு அடிமேல் அடிகொடுத்து வந்தவர், தோழர் T. A. V. நாதன் அவர்கள். திலகர் சுயராஜ்யநிதி மோசடி பற்றித்தமிழகம் மட்டுமல்ல, இந்திய உபகண்டமே உணர்ந்துகொண்டது, தோழர் T. A. V. நாதன் அவர்கள். அதுபற்றி ஜஸ்டிஸ் பத்திரிகையிலே முன்பு தொடர்ச்சியாக எழுதிவந்த அரிய தலையங்கங்களாலேயேயாகும். தன்மான இயக்கத்திலே தளராத ஆர்வம் அவருக்கு எப்போதும். மன்றநடுவேவந்திருந்து பிறருக்குத் தம்மைக்காட்டிக்கொள்ளவேண்டும் என்ற மனப்பான்மையே அற்றவர், ஓய்வின்றி உழைப்பார், பிறர் அறியாவண்ணம். தீப்பொறிபறக்க ஆங்கிலமெழுதுவார், தேன்மொழியில் நண்பர்களுடன்பேசுவார், அடக்கமான சுபாவம், ஆளும் ஆஜானுபாகுவல்ல! இந்திஎதிர்ப்பு இயக்கத்திலே ஈடுபட்டுப் பணியாற்றியவர், “இந்தி ஒழிக” என்ற முழக்கத்துடன் தோழர் T. A. V. நாதன், பல ஆயிரக்கணக்கான மக்கள் புடைசூழ, சென்னை இந்துதியாலாஜிக்கல்பள்ளி முன்நின்று மறியல் செய்ததும், கைதுசெய்யப்பட்டதும், பலர் அச்சமயம் கண்ணீர் வடித்ததும், இன்றும், அன்று பார்த்தவர்களின் மனக்கண்களைவிட்டு அகன்றிராது. வாலிபரின் உள்ளத்திலே புதியதோர் எழுச்சியை உண்டாக்கினர், அமைதியே உருவானதுபோன்ற நமது அருமைநண்பர். இதுபோது சென்னையில் ‘யுத்தசஞ்சிகை’யின் ஆசிரியராக அமர்ந்திருக்கிறார், ஜனநாயக வெற்றிக்கு உழைக்கும் அரும்பணியாற்றிவருகிறார். அவருக்குச் சர்க்கார் ராவ்சாகிப் பட்டத்தை வழங்கியுள்ளனர். பட்டம் என்ற சொல்கேட்டதும் தொட்டால் பாவம் தீண்டும் என்றுகூறும் வேடதாரிகள் சிலருண்டு, கிடைத்ததும், எட்டிப்பிடித்துவிட்டோம் இணையில்லாக் கௌரவத்தை என்று இறுமாந்திடுவோரும் சிலருண்டு. தோழர் நாதன். அவர்களின் இயல்பு அறிந்தவருக்குத்தெரியும் அவர் இந்த இரண்டு ரகத்தையும் சார்ந்தவரல்ல, பட்டம், அவருக்குக்கௌரவம் தருவதுஎன்று கூறுவதைவிட, அத்தகையவர்களைச் சென்று அடைந்ததால்பட்டத்தின்மதிப்பு உயருகிறது என்று உரைப்பது மிகப் பொருத்தமாகஇருக்கும். எனவே, நமது நண்பருக்குப்பட்டம் நல்கியதற்காகச்சர்க்காரை நாம் பாராட்டுகிறோம். சர்க்கார், அவர் போன்றாருக்குப் பொறுப்பும், பணிபுரியும், வசதியும் நிரம்பிய அலுவல்களைத்தந்து, அத்தகையவர்களின் ஆற்றல் பொதுமக்கட்குநன்கு பயன்படும்படி வழிசெய்வது இன்றியமையாததாகும். மற்றும் பட்டம்பெற்ற அன்பர் பலருக்கும் நமது வாழ்த்துகளை வழங்குகிறோம்.

## புன்னகையும் பெருமூச்சும்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி.)

சறிந்த பொய்யுரைக்கவும், விஷயமறியா மக்களை ஏய்த்து வாழவும் வகைகற்ற ஒரு கூட்டத்தை நாடு இன்னமும் நம்பிக்கொண்டிருக்கிறதே என்பதை எண்ணும்போது, என்னையும் அறியாமல் பெருமூச்சுப்பிறந்தது.

சிராளாவிலிருந்து இருபது மைல்களுக்கப்பால், நாகட்லா என்ற கிராமம். அங்கே கவிராஜ ஆஸ்ரமம் என்ற பெயருடன், காலஞ்சென்ற பாரிஸ்டர் இராமசாமி அவர்களின் நினைவுக்குறிக் கழகம். அதற்குச், சீதாராம அம்மையார் என்பவர், 5000 ரூபாய் மதிப்புள்ள ஒரு கட்டிடமும், படிப்பகமும் அமைக்க நன்கொடை நல்கினர்கள். 4-ந்தேதி காலை, காரச்சேடி, தோழர் குப்புசாமி சௌத்ரி அவர்கள், அக்கட்டிடத்தைத் திறந்துவைத்து, “கோயில்கட்டிக் குளம்வெட்டி ஒரு ஜாதியார் பிழைக்கவழி செய்வதை இதுவரை தர்மம் என்று கருதிவந்தார்கள். அந்தப் பழமை மடிந்தது. இதுபோது, மக்களுக்கு, நமது சமுதாயத்துக்கு நல்லறிவு பயக்கும் கழகங்கட்கு நன்கொடைகள் வழங்கும் வழக்கம் பரவி வருகிறது. இது அறிவின் அறிகுறி” என்று எடுத்துக்கூறினர்.

அன்றுமாலை, கிராமமக்கள் ஏராளமாகக் கூடினர். பெண்கள், நமது தமிழகப் பகுதியிலே வருவதைவிடப் பன்மடங்கு அதிகமாக வந்திருந்தனர். தோழர் வெங்கடாத்திரி என்பவர், விழாவுக்கு வந்திருந்தவர்களை வரவேற்றும், பாரிஸ்டர் சௌத்ரி அவர்களின் அருந்திறனை எடுத்துக்காட்டியும் பேசியபிறகு, பெரியார் இராமசாமி அவர்கள் ஒருமணி நேரம் வரை, தன்மான இயக்கக் கோட்பாடுகளைத் தெலுங்கில் எடுத்துரைத்தார், அன்றிரவு, விழாவிற்குவந்திருந்த பலஊர்த் தோழர்களிடம், திராவிடநாடு பிரச்னை பற்றிக் கலந்துபேசினர். 5ந்தேதி காலையில் பண்டித வெங்கடரத்னம் என்பவரும், நரசிம்மையா என்பவரும், பாரிஸ்டர் அவர்களின் மனப்போக்கையும், புராண ஆபாசத்தையும் விளக்கிப்பேசினர். மாலையில் நான் ஆங்கிலத்தில் பேசி

னேன், தோழர் ஜனார்த்தனம் தெலுங்கில் பேசினார். சீராளா உயர்நிலைப்பள்ளி தெலுங்கு ஆசிரியர் தோழர் சத்தியநாராயணா பேசிய பிறகு, பெரியார், தமது முடிவுரையாக இரண்டு மணிநேரம் தெலுங்கில் அரியதோர் சொற்பொழிவாற்றினார், இராமாயணம், பெரியபுராணம் மனுஸ்மிருதி முதலியவைகளைத் தீயிலிடவேண்டியதன் அவசியத்தை விளக்கி, ஆவேசமுள்ள இனஎழுச்சியுள்ள வாலிபர்கள், சமுதாயப்புரட்சி நடாத்த முன்வரவேண்டும் என்று உணர்ச்சிப் பெருக்கெடுத்தோடப் பேசினார். வந்தனங்கூறமுன்வந்த கோபிநாத் எனும் இளைஞர், இராமாயணத்தைப் படலம் படலமாக எடுத்துச் சாடினார், சம்புகவதத்தின் கொடுமையை எடுத்துக் காட்டி, இராம இராஜ்யத்தின் இலட்சணத்தை இடித்துரைத்தார், இராமாயணத்தைத் தீயிலிட வேண்டுமென்றுகூறி "தீயும் கெட்டுவிடும் தீய கருத்துகள் அடங்கிய இந்நூலைத் தீயிலிடுகையில்" என்று தீப்பொறிபறக்கப் பேசினார். பார்ப்பனியம் ஒழிக! பார்ப்பனரல்லாதார் சமுதாயம் வாழ்க! என்ற முழக்கத்துடன் விழா இனிது முடிந்தது.

திராவிடர், என்ற உணர்ச்சி, ஆந்திரத்திலே செல்லாது என்று சிலர் கூறுவதுண்டு. அதற்குக் காரணம், ஆந்திரநாட்டிலே, திராவிட உணர்ச்சி இருப்பதை நாம் உணர வழியில்லாமல் போய்விட்டதேதான். நாம் ஆந்திரநாட்டுணர்ச்சியை அறியவும், நமது உணர்ச்சியை அவர்களுக்குத் தெரிவிக்கவும், ஆங்கில இதழ் நமக்கு இல்லை. இருக்கும் "சண்டே அப்சர்வருக்கோ" "லிபரேடருக்கோ" வேறு பணிகள். தன்மான இயக்கத்துக்குத் தடை ஏற்பட்டு இருப்பதற்கு இதுவே காரணம். இக்கருத்துகள் தெலுங்கர் நாட்டிலே பரவாமலில்லை. ஆங்காங்கு சிந்திச் சிதறிக்கிடக்கிறது. ஒன்று திரட்டி உருவாக்கு முன்னம் பாரிஸ்டர் இராமசாமிச் சௌத்ரி இறந்துவிட்டார். ஆனால் அவருடைய கொள்கைகளைப் பின்பற்றும் வாலிபர்கள், வாளாயிருப்பார்கள் என்று சொல்லமுடியாது.

புரட்சிக்கவி கனகசுப்புரத்தினம், தாம் இயற்றிய இரணியன் அல்லது இணையற்ற வீரன் எனும் நாடகத்திலே, தூணிலிருந்து நாராயணன் வந்த விந்தையை விளக்கியிருப்பதை நமது தோழர்கள் அறிவர். தூண்மறைவிலே தூர்த்தன், ஆரியன் ஒளிந்துகொண்டிருக்கிறான், சிங்க முக மூடியுடன், இரணியன் எனும் இணையற்ற வீரனைக்கொல்கிறான். தன்மானத் தனிக்கவிகூறிய இக்கருத்துப்போலவே, பாரிஸ்டர் இராமசாமி, அங்கு பேசியும் எழுதியும் இருக்கிறார் என்றால் எவ்வளவு ஆச்சரியமாக இருக்கிறது! தகப்பனுக்கே துரோகியான பிரகலாதனுக்கு உடந்தையாக ஒரு ஆரியன், தூண் மறைவிலே ஒளிந்திருந்து இரணியனைக் கொன்றான், அதை நரசிம்ம அவதாரமென்று நமதுமக்கள் நம்பிக்கெடுகின்றனர் என்று பாரிஸ்டர் சௌத்ரி அவர்கள் எழுதி இருக்கிறார். பகீரதன் ஆகாயத்திலிருந்து கங்கையை கொண்டுவந்தான் என்று புராணிகன் புளுகுகிறான், இதனை நம்பவேண்டாம். பகீரதன் என்பவன், இமயமலைச் சாரலிலிருந்து, நதிக்காக வழிவகுத்திருப்பான், இதனைத்தான் புராணிகன் புரட்டாக எழுதிவைத்துவிட்டான், இதனை நம்புவதால், பார்ப்பான் பிழைக்கிறான், நம்மவர் பொருள் இழக்கின்றனர், என்று பாரிஸ்டர் கூறியிருக்கிறார். இவைகளைவிட மற்றொரு முக்கியமான கருத்தை அவர்கூறியிருக்கிறார். ஆனால் அந்நாட்டிலே வேரூன்றும்வரை அவர் இருப்பதற்கில்லாமற் போய்விட்டது.

தமிழர்மட்டுந்தான், நெடுங்காலமாக ஆரியத்தை அவ்வப்போது எதிர்த்து, அடிபணியமறுத்துப் போரிட்டுவந்திருக்கிறார்கள். அடிக்கடி புரட்சிப்புயல் வீசியபடி இருந்திருக்கிறது. மண்டியிடும் மன்னர்களும், மதிகெட்ட மந்திரிகளும், சிந்தனைகெட்டமக்களும், தன்மானம்கெட்ட சில புலவர்களும், ஆரியத்தின் அடிவருடிகளானார்கள் என்றபோதிலும், பலமுறை பலர், ஆரியத்திற்கு எதிரிடையாகப் புரட்சிநடத்தியிருக்கிறார்கள். இன்றுவரை அப்புரட்சி நடந்துகொண்டேதான் இருக்கிறது. இப்புரட்சிக்கு, மக்களுக்கு அவ்வப்பொழுது தேவையான உணர்வை ஊட்டுவது, தமிழ்மொழியே! அம்மொழி ஒன்றே, ஆரியஆலிங்கனத்தைப் பெற்றுங்கூடத்தனித்துவாழும் தகைமையைத் தளரவிடாமல் தன்மான ஊற்றாகஇருந்து வருகிறது. இன்று வடமொழி தமிழிலே கலந்துஇருப்பினுங்கூட, தெலுங்கு, மலையாளம், முதலிய மொழிகளிலே உள்ள அளவுஇல்லைஎன்பதுமட்டுமல்ல, இன்றுங்கூட, கலந்துள்ள வடமொழியை நீக்கிவிட்டு, தலைநிமிர்ந்து, வளமோ அழகோ துளியும்குறையாமல்,குறையாததுமட்டுமல்ல அதிகமாக விளங்கும்படி தனித்து இயங்கமுடியும். தொட்டால் துவளும் கோளக்கன்னிபோலன்றி, அணைப்பால் அழிந்த ஆந்திர அணங்குபோலன்றி, தமிழ்த்தாய், முற்றத்தேவந்து விளையாடும் சிறார்களைப்பிடித்திழுத்துப் பண்டம்தந்து அனுப்பவதுபோலத், தமிழ், வடமொழிபோன்ற எம்மொழியையும், உடனிருக்க அனுமதி தந்ததேயன்றி, அடிமையாகவில்லை. இந்தத் தனித்தமிழ், இன்றும் தன்மானத்துக்கு ஊற்றுஎன்று கூறலாம். தெலுங்கிலேயோ, மலையாளத்திலேயோ இன்றுள்ள வடமொழியை நீக்கிவிட்டால், அவ்விரண்டுமொழிகளும் தனித்துஇயங்கமுடியுமா என்பது சந்தேகமே. மொழி இழந்த மக்கள் வழிஇழந்த விழிஅற்ற மக்கள்என்று கூறல் மிகையல்லவே! இந்தக் குறைபாட்டினை உணர்ந்த பாரிஸ்டர் இராமசாமி தெலுங்குமொழியிலேஉள்ளவடமொழிச் சொற்களை நீக்கவேண்டும், தனித் தெலுங்கு எழுதவேண்டும் என்ற கிளர்ச்சியைத் துவக்கினார். ஆந்திரர் என்ற பெயரோ, ஆரியத்துக்கு அடிமையானதையே குறிக்கிறதென்றும், தெலுங்கர் என்றுகூறிக்கொள்வதே, மொழியை அடிப்படையாகக்கொண்ட உணர்ச்சி ஊட்டும்சொல் என்றும், பாரிஸ்டர் கூறினார். ஆந்திரப்பல்கலைக் கழகம் ஏற்பாடானபோது, அவர் "செனட் சபை"யிலே அங்கம் வகித்திருந்தார். அக்கூட்டத்திலே, "தெலுங்குப்பல்கலைக் கழகம்" என்று பெயரைமாற்றிவைக்கவேண்டும் என்று வாதாடினார், ஆரியத்தை நம்பியவர்கள் பெரிவாரியாக அங்கு இருந்தால், பாரிஸ்டரின் முயற்சி பலிக்கவில்லை, எனவே அவர், தமது கண்டனத்தைத்தெரிவிக்க அக்கூட்ட நடவடிக்கையிலே கலந்துகொள்ளமுடியாதென்று கூறிவிட்டு வெளிஏறிவிட்டார். இன்று, தெலுங்கும் தனித்தியங்கவேண்டும்என்ற எண்ணமும், தனித்தியங்கமுடியும் என்ற நம்பிக்கையும்கொண்ட இளைஞர்கள்பலர் இருக்கின்றனர். கிராமங்களிலே, கொச்சைத் தெலுங்கு என்று கூறப்படும் பேச்சிலேயும் பாட்டிலேயும், தொட்டிலாட்டும்தாயின் கொஞ்சுமொழியிலிருந்தும், ஏருழுபவனுடைய ஏலேலோவிலிருந்தும், இன்று, தனித்தெலுங்குச் சொற்களைத்திரட்டித் தெலுங்கு தனித்துவாழ வழிசெய்யவேண்டுமென்று விழைகின்றனர். மொழியிலே ஆர்வம், பிறகு இன எழுச்சிக்கு வழிதராமற்போகாது.

கம்ம, காபு, வெலமா, ரெட்டி, என்று பல பிரிவுகளாகத் தெலுங்கர்பிரிந்துகெடுவதைக்கண்டித்து, இப்பிரிவுகள் ஜாதிப் பிரிவுகளல்ல, ஒவ்வொருவகையான நிலத்துக்கும் தக்கதோர் தொழிலும்வாழ்க்கை முறையும் அமைந்திருக்கிறது, அதுபோலவே ஆந்திரத்திலே, உள்ளபலபகுதிகளிலேஉள்ள மக்கட்கு நிலப்பண்புக்கும் தொழில்முறைக்கும் ஏற்றவண்ணமே பெயர் அமைந்தது, இது ஜாதியைக் குறிப்பதல்ல, ஆரியருக்கே ஜாதிபேதம் உரித்தானது, நமக்குஅல்ல, என்றுபாரிஸ்டர் கூறியிருக்கிறார், குறிஞ்சி முல்லை, மருதம், பாலை, நெய்தல் என்று பண்டைத் தமிழர் நிலத்தினைப் பகுத்துக்கூறியிருப்பதுபோன்ற விளக்கமே, பாரிஸ்டர் எடுத்துக்கூறியதும். நமது இயக்கத்தினரைப்போலவே, பாரிஸ்டரும், திருமணங்களிலே ஆரியத்தைவிரட்டி இருக்கிறார். பல திருமணங்கள் வடமொழி நீக்கப்பட்டும், ஆரியரின்றியும் நடத்திவைத்தார். இவ்வளவுடன், திராவிட இனஎழுச்சிக்காகவும் பாடுபட்டிருக்கிறார். பத்தாண்டுகளுக்குமுன்பு, நெல்லூரில்நடந்த ஜஸ்டிஸ் மாநாட்டின்போது, பாரிஸ்டர் இராமசாமி, பெரியார் இராமசாமியைக் கண்டு பேசினாராம். இராம இராஜ்ய அலங்கோலத்தைவிளக்க அவர் எழுதிய சம்புகவதம் எனும் நூலைபும படித்துக் காட்டினார். தன்மான இயக்கத்திற்கு

(6-ம் பக்கம் பார்க்க)

## புன்னகையும் பெருமூச்சும்.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் தளராது உழைத்ததுடன், ஆரியப் புராணப்புரட்டுகளை விளக்கிப்பல புத்தகங்களை எழுதியுள்ளார். சூதபுராணம் என்ற தலைப்புள்ள நூலிலே, ஆரியப் புராணங்களை அலசி அலசிக்காட்டியிருக்கிறார். அவர் துவக்கிவைத்த இயக்கத்தை வேகமாக, விறுவிறுப்பாக நடத்தவேண்டுமென்ற நோக்கம் இன்று அங்குபலருக்கு இருக்கிறது. "பதினெட்டு பாபங்கள்புரியும் பார்ப்பனர்" "துலாசாரம் ஒரு கற்பனை" "சாத்திரத்தின் அடிமை" "சமுதாயப் புரட்சி" என்பனபோன்ற பல நூற்கள் வெளிவந்துள்ளன, தெலுங்கிலே. தெனலியிலே சுதாஸ்ரமம் என்ற பெயருடன் ஒரு சங்கம்இருக்கிறது.

"சரி! சரி! இனிநான் சாஸ்திரோக்தமாகவே நடக்கப்போகிறேன். பாரதவர்ஷத்தின் பண்டைப் பெருமை பங்கமடையலாமா? இனி, ஆகமவிதிப்படி, ஆதிநாட்களிலே இருந்த முறைப்படி நடக்கப்போகிறேன்" என்று தீர்மானித்தான், ஒரு பிராமணன், பள்ளியின் ஆசிரியன். கங்கைதூங்கும் நேரத்திலே காகம் கரையுமுன், கதிரவனின் ஒளிதுளிபோல் காணப்படும் நேரத்திலேதான், காலைக் கடன்களை முடிக்க,சாஸ்திரோக்தமாகக் கிணற்றருகே சென்று, ஸ்நானம்செய்தான். அந்தக் குளிர்ந்த நீரைமேலே கொட்டிக்கொண்டதும்,சாஸ்திரமுறைப்படி நடக்கிறோம்என்ற களிப்பு உடலைப் பிடித்து உலுக்குவதுபோல, நடுங்கிற்று. புன்சிரிப்புடன், சம்போ! மகாதேவா! என்று பஜித்தான். குடம் குடமாகத்தண்ணீரைத் தலையிலே கொட்டிக்கொண்டபடி. புறக்கடையை வழக்கமாகச் சுத்தம் செய்யும் குப்பைக்காரன் கண்டானு, ஆரியன் சாஸ்திரோக்தமாக நடக்கத் தீர்மானித்திருப்பதை. வழக்கமாக வந்து நின்றான், கண்டான் ஆரியன். "கர்மமே! கிரஹசாரமே!" என்று கூவினான், தலையிலே அடித்துக்கொண்டான் "மகாபாபி நீ எங்கிருந்தடா வந்து சேர்ந்தாய். குளித்து முடித்ததும், சண்டாளனைக் காண்பது, மகாபாபமாயிற்றே. போய்த் தொலையடா" என்று வைதார், அவன் சென்றபிறகு, மீண்டும் ஆரம்பித்தார், ஆச்சாரத்தோடு தமது ஸ்நானத்தை. உடைவெளுப்பவனுக்கு அன்று ஏதோ அவசரம், அவன்வந்து சேர்ந்தான் ஐயர் இரண்டாம் முறை ஸ்நானத்தை முடித்த சமயத்திலே.சாஸ்திர விரோதம் அதுவும், எனவே மீண்டுமோர் முறைஸ்நானம் செய்யவெண்டிநேரிட்டது. இவ்விதமாக மூன்றுநான்குமுறைகள்,திரும்பத்திரும்ப ஸ்நானம் செய்து, பூஜை முடித்துக் கொண்டு போஜனத்துக்குச் சென்றார். அவர் அமர அம்மையார் வழக்கமாகப் போடும் மணையைப்போட்டிருந்தார்கள். ஐயருக்கு ஒரு சாஸ்திரம் நினைவிற்கு வரலாயிற்று. மரத்தால் செய்த ஆசனத்திலே அமருவது ஆச்சார விரோதம் என்று மனுவோ, பாராசரரோ, அல்லது அவர்களின் வழிவழி வந்தவர்களோ உரைத்துப்போனதாக நினைவுக்குவரவே," ஆசனத்தை அகற்றடி! ஆலிலையையும்அகற்று! கூட்டிமெழுகு; சுத்தம்செய்" என்று சகதர்மினிக்குக் கூறினர். பள்ளிபோக வேண்டிய சமயம் நெருங்கவே பயந்தார், பதைத்தார், மெழுகிய இடம் உலருமுன்னரே அமர்ந்தார். உண்ணப்போகும் சமயம், உரத்த குரலிலே யாரோ அழுகிற சத்தம் கேட்டது, அவர்களுக்குத் தெரியாதல்லவா, ஐயர் சாஸ்திரோக்தமாக நடக்க இருப்பது; ஐயருக்கோ ஒரு சாஸ்திரக்கட்டளை நினைவிற்கு வந்தது. "போஜன சமயம் புலம்பல் கேட்டால், போகிறகதி நல்லதல்ல" என்று யாரோ கூறினதாக அவர்படித்திருந்தார்.எனவே சாப்பிடவில்லை, நேரேபாடசாலை சென்றார். வியாகர்ண வகுப்பு. வேதவியாகர்ணங்களை வேதியருக்கன்றிவேற்றாருக்குப் பாடம் சொல்லுவது சாஸ்திரவிரோதம். பள்ளியிலேயோ, பார்ப்பனரல்லாத பிள்ளைகளும் இருந்தனர்.ஆசிரியருக்கழகு பாடங்கூறுதல், ஆனல் ஆசிரியருக்கழகு ஆகமவிதிப்படி நடப்பது, எனவே, "சூத்திர"ப்பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லித்தரமறுத்தார், அன்றே வேலையும் போய்விட்டது. மறுதினம் சிரார்த்தம்! கங்கைக்கரையிலே சிரார்த்தம் செய்தால் சாஸ்திரோக்தமாக இருக்கும் என்றஎண்ணத்தால், காசிக்ஷேத்திரம் சென்றார். அங்கோ, பலஜாதிமக்களும் ஸ்நானம் செய்திடக்கண்டு பதைத்தார். நீசர்களும் ஸ்நானம் செய்யும் இடத்திலே சிரார்த்த காரியத்தைச் செய்வது ஆச்சாரவிரோதமாகுமே! எனவே அவர் கடலுக்குச் செல்வோம் என்று கராச்சிசென்றார்: அங்கோ, பலஜாதியினர்மட்டுமல்ல,வெள்ளைக்காரரும் கடலருகே இருக்கக்கண்டார், விசனித்தார். ஒருயுக்தி தோன்றிற்று. நீரும் நிலமும் அசுத்தமாகிவிட்டது, இவ்விரண்டு இடங்களிலும்சிரார்த்தம் செய்வது சாஸ்திரவிரோதமாகிவிட்டது. சுத்தமான இடம் ஆகாயம்! எனவே அங்கே சென்று சிரார்த்தம் செய்வது சாஸ்திரோக்தமாக இருக்கும்என்று தீர்மானித்தார், விமானநிலையம்சென்று வாடகைக்கு ஒருவிமானத்தை அமர்த்திக்கொண்டார், புரோகித சகிதம்,வானிலே வட்டமிட்டார். விமானம் வானிலே சுற்றித்திரிந்துகொண்டிருக்கும் வேளையிலே, சிரார்த்தத்தை முடித்துவிடுவதென்று எண்ணினர் சிரார்த்தகாரியம் தொடங்கிற்று. புரோகிதருக்கு அதேசமயம் மயக்கமும் குமட்டலுமாகி வாந்தி எடுத்து, இடத்தையே அசுத்தமாக்கிவிட்டார்! ஆகவே விமானமும் சிரார்த்தகாரியத்துக்கு ஏற்றதாக இல்லை, என்செய்வார் ஐயர்? சாஸ்திரோக்தமாக அரபிக் கடலிலே விழுந்து பிராணத்தியாகம் செய்துகொள்வதா! யோசித்தார். அறிவு அவருக்கு உதிக்கலாயிற்று. "மூடா! காலம் எவ்வளவு மாறிவிட்டது! உலகம் எவ்வளவு மாறிவிட்டது! மாறினதும், மாறிக் கொண்டே இருப்பதும், மாறுதலையே இலட்சணமாகக்கொண்டதுமான பிரபஞ்சத்திலே, நீ ஒரு சிறுஜென்மம். உன்னால் இந்த மாறுதலைத்தடுக்க முடியமா? இந்தமாறுதல் என்ற வெள்ளத்திலே எதிர்நீச்சுப்போடுகிறாயேமுடியுமா? ஆகமமும் சாஸ்திரமும்அந்தக்காலத்து மக்கள் அச்சமயத்திலே இருந்த அறிவிற்கு ஏற்றபடி, அந்த உலகத்து வசதிக்காக ஏற்படுத்திக்கொண்டவைகள். இந்தக்கால அறிவுக்கு அவை பொருந்துமா? இந்தக்கால உலகுக்கு அவைதேவையா? இந்தக் காலத்து வசதிக்கு இவை துணைசெய்ய முடியுமா? குரங்குப்பிடியாக இராதே." என்றுகூறிற்று. சாஸ்திரோக்தமாகவாழ்க்கையை நடத்தவேண்டுமென்று "சங்கல்பித்துக்கொண்ட" பிராமணன், புத்திவரப்பெற்று, ஒருவராலும் முடியாத காரியம் சாஸ்திரோக்தமாக நடப்பதென்பதுஎன்றுதெரிந்துகொண்டு விமானத்தைக் கீழே இறக்கச்சொல்லி ஊர்திரும்பினன். சாஸ்திர அடிமையாக இருந்தவன், புத்திமானுன்.

இக் கருத்துடன் ஒரு கதை, "சாஸ்திரத்தின் அடிமை" என்ற தெலுங்குப்புத்தகத்திலே இருக்கிறது. கதைமட்டுமல்ல, புராணங்கள் பலவற்றையும் பலமாகக் கண்டிக்கப்பட்டிருக்கிறது எனவே, தன்மான இயக்கவித்து அங்கு தூவப்பட்டு இருக்கிறது, உழைப்பெனும் நீர் பாய்ச்சினுல், முளைவிட்டுப் பயிர் செழிக்கும். உழவு முறைதெரிந்தால்மட்டும்போதுமா, உழைக்க ஆட்கள் தேவை. நாகட்லா சென்றதில் நான்கண்ட உண்மை இது. முயற்சிசெய்தால் வெற்றி உண்டு என்பதை எண்ணும்போது புன்சிரிப்பு, அம்முயற்சி செய்யமுடியாத நிலைமையில்நாம் இருக்கிறோமே என்பதை எண்ணும் போது பெருமூச்சு, இரண்டும் மாறி மாறி வருகின்றன. என்னசெய்வது!

## தோழர் கி. ஆ. பெ. வி.

திருச்சித் தோழர் கி. ஆ. பெ. விசுவநாதன் அவர்கள் சிலநாட்களாக இரத்தக் கோளாறால் நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் இருக்கிறார். டாக்டர்கள் மருந்து கொடுத்துவருகினறனர்.

## சந்தாதாரர்களுக்கு.

"திராவிட நாடு" சந்தாதாரர்களிற்பலர் தங்கள் பாக்கியை நெடுநாட்களாகச் செலுத்தாமல் இருப்பது பெரிதும் வருந்தத்தக்கது. அன்புகூர்ந்து பாக்கிகொடுக்க வேண்டியவர்கள், தங்கள் பாக்கியை உடனே கொடுத்துவிடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

K. சண்முகம்

"திராவிட நாடு" ஏஜண்டு

# கலியாண வைபவம்!

2ம் பக்கத் தொடர்ச்சி.

பெண் வீட்டில் இவ்வாறு இருக்க, மாப்பிள்ளை வீட்டில் கலியாணத்திற்காக ஏகதடபுடல் நடந்துகொண்டிருந்தது. மாப்பிள்ளையும் தனது பிளஷர்காரில் திண்டிவனம்வரப்புறப்பட்டாகிவிட்டது. அச்சமயத்தில் மாப்பிள்ளை மிட்டாதார் கையில் தந்திச்சேகவன் ஒருதந்தியைக் கொடுத்தான். மாப்பிள்ளை படித்தார்.

புஷ்பவல்லி கிணற்றில்தவறிவிழுந்து மாண்டாள். இப்படிக்கு,
சுப்பிரமணிய ஜோதிடர்.

மாப்பிள்ளைமுகத்தில் விசனக்குறிகள் தோன்றிற்று. கலியாணத்திற்குப் புறப்பட்ட எல்லோரும் விசனத்துடன் வீடு திரும்பினர்.

நேயர்கள்கேட்கலாம்! சுப்பிரமணியர் ஜோதிடர் ஆயிற்றே! அவருக்கு ஏன் இவ் விஷயங்கள் தெரியாமல்போகும்?என்று. காலமாறுதலை அவர் அறிய முடியாதவர்? இதற்குத் தகுந்தாற்போல் அவர்மதியும் மாறிவிட்டது! தவிர பாழும் பணத்தாசை அவரை விடாப்பிடியாகப் பற்றிக்கொண்டது. இதற்கிடையில் ராமுவும் ராஜூவும் யாருக்கும்தெரியாமல் மிட்டாதாருக்கும் சுப்பிரமணிய ஜோதிடருக்கும் தந்தி கொடுத்திருப்பார்கள் என்று நேயர்களே தெரிந்திருப்பீர்கள்.

மாப்பிள்ளை மாரடைப்பால் மாண்டார் என்பதை அறிந்த சற்றுநேரத்திற்குப்பின் சுப்பிரமணிய ஜோதிடர் மளமளவென்று தனிக்கார்ஒன்று வைத்துக்கொண்டு வாலாஜாபேட்டைக்குச் சென்று தனது நண்பர் "பார்த்தன்" என்பவரைச் சந்தித்துநடந்த விஷயத்தைத்தெரிவித்து அவர் குமாரன் சாம்பு என்பவனுக்கு தனதுபெண்ணைக்கொடுப்பதாகவும், அதற்காகும் செலவைத்தானே போட்டுக்கொள்வதாகவும்சொல்லிசாம்புவையும் அவன் தகப்பனுருடன் சில உறவினர்களையும் அழைத்துவந்தார்.

வீட்டிற்கு வந்ததும் வெள்ளிக்கிழமை குறிப்பிட்ட முகூர்த்தத்தில் "சாம்பு"க்கு கலியாணம்நடத்த ஏற்பாடுசெய்தார்

முகூர்த்தவேளை வந்துவிட்டது. மாப்பிள்ளை வெகு அலங்காரத்துடன் கலியாணமண்டபத்திற்கு வந்தான். புஷ்பவல்லியை அழைத்துவரும்படி தந்தை உத்தரவு கொடுத்துவிட்டார். பெண்ணை நாலைந்துபேர் அழைத்துவந்தனர். புஷ்பவல்லியும் அழுதகண்ணீரும் சிந்தியமூக்குமாக மணமண்டபததைஅடைந்தாள்.பிரமாதக்கூட்டந்தான். வாத்தியக்கோஷ்டிகளும் பாண்டுக்காரர்களும் ஒருபுறம்வாசித்துக்கொண்டிருக்கின்றனர். இன்னொரு புறம் பார்ப்பனர்கள் குண்டங்களை வளர்த்துக்கொண்டு அர்த்தமாகா மந்திரங்களை ஜெபித்துக்கொண்டிருக்கின்றனர். மற்றொருபுறம் மீதியுள்ள பிராமணர்கள் பச்சைஅரிசி வரவில்லை, தக்ஷிணைவரவில்லை, அதுவரவில்லை. இதுவரவில்லை என்று குறைகூறிக் கொண்டிருந்தனர். இங்கு இவ்வாறு இருக்கும் பொழுது ராமுவிசனமுகத்துடன் ஒருமூலையில் உட்கார்ந்திருந்தான். பார்ப்பனர்கள் ஏதோ முணு முணுத்துவிட்டு தாலிகட்டும்படி சொல்லித் தாலியை மணமகனிடத்தில் கொடுத்துவிட்டார்கள். தாலிகழுததில் ஏறும்சமயம்! இச்சமயத்தில் கூட்டத்தின் மத்தியில் 'நிறுத்து' என்றசப்தத்துடன் 'டபீர், டுபீர்' குண்டுகள் வெடிக்கும் சப்தம்கேட்டது. மணமகன் தாலியைக்கீழே போட்டுவிட்டான். அந்தணர் அலறினர். மணமகள்முகம் மலர்ந்தது. மணமகன் பயத்தினால் நடுங்கிக்கீழே விழுந்து விடுவான் போலிருந்தது. ராஜூ, தன்நண்பன் ராமுவின் கையைத்தாதா வென்று பிடித்திழுத்துக்கொண்டு வந்து தகப்பன் முன்நின்று ரிவால்வர் நீட்டியகையுடன் தந்தையைநோக்கி, தந்தையே! தாங்கள் என்னகாரியம் செய்யத்துணிந்தீர்கள்! இந்தப்பரதேசிப்பையன்களுக்கு என்அருமைத் தங்கையைக் கொடுக்க நான்சம்மதிக்கமாட்டேன். ஆதலால் என்ஆருயிர் நண்பன், ஏழைகளின் தோழன், பொதுஜனப்பாட்டாளி, சமத்துவம், சகோதரதத்துவம், தேசபக்தி உடையவனுகிய 'ராமுக்கு' இந்த நேரத்திலேயே கலியாணம் செய்து கொடுங்கள். தாங்கள் அவ்வாறு செய்யாமல் இந்தப்பிச்சைக்காரப் பையனுக்கு கலியாணம் செய்துகொடுத்து, அவள்ஒரு சிறிதும் மனமில்லாமல் அவனுடன் வாழ்ந்து வருவதைப்பார்த்து நான் உயிர் வாழ்வதைவிட இதே இடத்தில் இப்பொழுதே இந்த ரிவால்வரின் உதவியால் அவனைச்சுட்டு, பின்நானும் எனது நண்பன் ராமுவும் அவளுடன் போய்விடுகிறோம். எங்களுக்கு இந்தஉலகத்தின் வாழ்வுஇத்துடன்போதும். நேரம் ஆகிறது. இதற்கு தங்கள் அபிப்பிராயம் என்ன? சீக்கிரம் சொல்லும் என்று அதட்டிக்கேட்டான். தந்தை முடியாது என்றார். கூட்டத்தினரும் முடியாது என்றனர். அந்தணரும் அது அநியாயம் என்றனர்.

உடனே ராஜூக்கு கோபம் வந்துவிட்டது.யாககுண்டங்களையும் தட்டு முட்டுச் சாமான்களையும்காலால் உதறிஎறிந்தான். மணமண்டபத்தினுள் நுழைந்து மணமகன் கையைப்பிடித்து 'சரக் என்று வெளியில் இழுத்துவிட்டான் மணமகனுக்கு மண்டையில் பலத்தகாயம். அந்தணர்கள், மோசம்! மோசம்! முகூர்த்தவேளை தவறிவிடும் போலிருக்கு. மாப்பிள்ளையை உட்காரவையுங்கள், எப்படியாவது முகூர்த்தத்தைநடத்திவிடுவோம். பின்பாக்கி சமாச்சாரம். நாழியாகிறது, இன்னொரு வீட்டுக்குத் திதிக்குப்போக வேண்டியிருக்கிறது, தக்ஷிணைபேய்விடும் என்று கூக்குரல் இட்டனர். சுப்பிரமணிய ஜோதிடருக்கு அடங்காக்கோபம் வந்துவிட்டது. பிடியுங்கள் அவனை என்றார். கூட்டத்தினர் 'ராமு'வைப்பிடிக்கப்பக்கம்சுர்ந்தனர். மீண்டும் வெத்து வேட்டுகள் இரண்டுகிளம்பவே தூரத்தள்ளிநின்றனர். ராஜூ, ராமுவை மண்டபத்தில் உட்காரவைத்தான். கீழே கிடந்த தாலியை நண்பன் கையில் கொடுத்து 'உம்', கட்டு என்றான். அப்பொழுது புஷ்பவல்லிக்குப் போனஉயிர் திரும்பிவந்ததுபோல் ஆயிற்று.தாலிகழுத்தில் ஏறியது.காதலர்களிப்புற்றனர். இரு முகத்திலும் இளம் புன்னகைதவழ்ந்தது. உடனே வாத்தியக்காரர்மங்களமுரசைக் கொட்டினர். தந்தை மானக்கேட்டை சகிக்கமுடியாமல் அப்புறம் மறைந்தார். தாம்பூலம் எல்லோருக்கும் வழங்கப்பட்டது. பார்ப்பனர்கள் பச்சரிசி கூடக் கிடைக்கவில்லையே! இன்றுயார்முகத்தில் விழித்தோமோ!இப்படியும்கலியாணவைபவம்நடக்குமா என்று ஏக்கத்துடன் தங்கள்இல்லத்தை அடைந்தனர்.காலைக்கதிரவன் ஒளியில் காதலர் இருவரும் களிப்புற்றனர். ராஜூவும் மட்டில்லா மகிழ்ச்சி அடைந்தான்.

---

## 'திராவிட இளைஞர்கழகம்' கரூர்.

26—5—44 கரூர் சின்னபள்ளித்தெருவில் தோழர் P. K. ஐயா அவர்களின் முயற்சியால், "திராவிடஇளைஞர் கழகம்" ஒன்று நிறுவப்பட்டது. ஷை சங்கத்திற்கு தலைவராக M. செல்லமுத்தும், உபதலைவராக R. கோவிந்தசாமியையும், C. மொட்டையன் பொருளாளராகவும், P. முத்துச்சாமி பொதுக்காரியதரிசியாகவும், C. கிருஷ்ணன் உதவிக்காரியதரிசியாகவும், அன்று நிகழ்ந்த மாபெருங்கூட்டத்தில் வாங்கல் M. பிச்சைமுத்து அவர்கள தலைமையில் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். "வாலிபரும் சீர்திருத்தமும்" என் பதுபற்றிப் பலதோழர்கள் பேசினர்கள். இச்சங்கம் நிறுவ, காமாட்சியம்மன் கோவில்த் தெரு தோழர்கள் அரும்பாடுபட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

---

## சேலம் மாவட்ட திராவிட இளைஞர் மாநாடு.

### 17—18—6—44-ல் நடைபெறும்.

தலைவர், தோழர். S. R. சுப்ரமண்யம் அவர்கள். வரவேற்புத்தலைவர், R. கண்ணப்பர். (மாணவர்) திறப்பாளர் R. நெடுஞ்செழியன், M. A. கொடிஉயர்த்துவோர் N. அர்ச்சுனன் அவர்கள் தோழர். P. ஜனார்த்தனம் B. A. தோழர் S.குருசாமி B. A. திருமதி S. குஞ்சிதம் B. A. L. T. திருமதி. S. R. சுப்ரமண்யம் C.P. சின்னராசு,பாவலர், பாலசுந்தரம், குரு. இராமலிங்கம் முதலானவர்கள்கலந்துகொள்வார்கள். அன்பர்கள் அவசியம் வரவேண்டுகிறோம். முக்கியமாகநம்மாவட்ட(ஜில்லா) மாணவர்களைக் கலந்துகொள்ள வேண்டுகிறோம். இடம் பின்னர் அறிவிக்கப்படும்.

# பெரியபுராணத்திற் சரித்திரமாம்!

பெரியபுராணத்திற்குச் சைவசமய மகத்துவம் கூறப்பட்டதுபோய், இன்று சரித்திரம் கூறப்பட்டுவருகிறது. அதிற் சரித்திர வரலாறு அடங்கியிருக்கிறதாம்! அதற்காகவாவது அந்நூலைக்காப்பாற்ற வேண்டுவது தமிழர்கள் கடமையாகும் என்று, ஒரு சில புலவர்களால் இன்று உரைக்கப்பட்டுவருகிறது.

மானமுடைய குடும்பத்திற்றோன்றிய மங்கையொருத்தி, அக்குடும்பமானத்தை அழிக்கும் அடாச்செயலிலீடுபட்டதைக் கண்டு அக்குடும்பத்தார் அவளைத் தண்டிக்கமுற்படும்போது, அவளால்நல்லனடையும் ஒருசிலர் "வேண்டாம்; அவள் அழகுத் தெய்வம்! அதற்காகவாவது நாம் அவளைக்காப்பாற்றவேண்டும்" என்று சமாதானஞ் சொல்லுவதுபோலிருக்கிறது மேற்கண்டபோதனை.

பெரியபுராணத்தில் சரித்திரவரலாறு அடங்கியிருக்கிறதா? சரித்திர வரலாற்றைப் பெரியபுராணம் தழுவிக்கொண்டிருக்கிறதா? என்பது ஒருபுறமிருக்கட்டும். அதற்காகவேண்டி, அறிவுக்கொவ்வாத ஆபாசம்நிறைந்த-நம்மை முட்டாள்களென்றும் மானமற்றவர்களென்றும் உணர்த்தக்கூடிய ஒரு நூலைக்காப்பாற்ற வேண்டுமென்று, இந்த 20-ம் நூற்றாண்டுப் புலவர்களும் சொல்லமுன்வருவார்களேயானால்—அவர்கள் கற்றஇலக்கிய அறிவு அவர்களை எவ்வளவுதூரம் பாழ்படுத்தியிருக்கிறது என்பது தெற்றென விளங்காமற்போகாது.

சேக்கிழார் செய்யுள் யாத்தலில் வல்லவர்; அவர் இலக்கியம் சுவையுடையது என்பதையாரும் ஆக்ஷேபிக்கவரவில்லை. அவர் வல்லமையெல்லாம், சைவர்களையோ அன்றிப்பொதுவாகத் தமிழர்களையோ அறிவுத்துறையில்கொண்டு செல்லமுடிகிறதா? முடியுமா? என்பதே கேள்வி. மூடத்தனத்தை அடிப்படையாகக்கொண்டு எவ்வளவுதான் இனிய செய்யுள் யாத்திடினும், அது காலப்போக்கில் அறிவுலகினால் இகழப்படாமல் வேறுஎந்நிலை எய்தும்? அதற்காக ஆத்திரப்படுவதில் பயன் யாது? இனிச்சரித்திரப் பகுதிக்குச்செல்வோம்.

"சிவனார் அடியெடுத்துக்கொடுக்க அதை முதலாகக்கொண்டு சுந்தரர் பாடியதை, நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டத்தொகையாகப் பாடினார்; அதை ஆதாரமாகக்கொண்டு, நாயன்மார் சரித்திரத்தை விரிவுபடுத்திச் சேக்கிழார் பாடினார்" என்பதே இதுவரை பெரிய புராணத்தைப்பற்றி நாமறிந்த செய்தி. இன்றோ, அதோடுமட்டுமல்ல; "கல்வெட்டுகளை நன்கு ஆராய்ந்து சரித்திரமுறை வழுவாமல்சேக்கிழார் அப்புராணத்தைப் பாடியுள்ளார்" என்று சிலர் சொல்ல முன்வருகின்றனர்.

இருக்கட்டும். பெரியபுராணம் கற்போர், சரித்திரம் அறிந்துகொள்வதற்காகவா அதைக்கற்கின்றனர்? அப்படித்தான் அவர்கள் என்ன சரித்திரஉண்மை கண்டனர்? "ஓர்ஊரில் ஓர்அரசன் இருந்தான்" என்றுதொடங்கும் கதைக்கும், "இன்னஊரில் இன்ன நாயனார் இருந்தார்" என்பதற்கும் என்ன வித்தியாசம் உண்டு, ஊர்பெயர் தவிர? அல்லாமலும்,

[P. S. சிவம்.]

இன்ன நாயனார் இன்னகாலத்தவர்; அவர் இன்ன ஆண்டுமுதல் இத்தனை ஆண்டுவரை இருந்தார் என்பதையோ, அல்லது அந்நாயனார் காலத்திருந்த அரசனது காலக்கணக்கையோ அதில்தெரிந்துகொள்ள முடிகிறதா? முடியுமா? சரிததிரத்திற்கு முக்கியமாக வேண்டப்படும் இக்காலக்கணக்கு இல்லாதவை, எப்படிச் சரித்திரசம்பந்த முடையனவாகும்? "கி. பி. 250 முதல் 900 வரையுள்ள இடைப்பட்ட காலத்தேதான்இந்த 63 நாயன்மார்களும் தோன்றியுள்ளனர். இந்த நாயன்மார்காலத்திற்கு 300ஆண்டுகட்குப் பின்னர்வந்த சேக்கிழார் பெரியபுராணம்பாடினார்" என்று சொல்லும் இந்நாள் ஆராய்ச்சிப் புலவர்கட்குக், கல்வெட்டுகளும் சரித்திரமும்தான் காலக்கணக்கையுணர்த்த உதவிற்றேயொழியப் பெரியபுராணம் ஒருசிறிதும் உதவிசெய்யவில்லையே! இதையறிந்தும், ஏனோ அப்புலவர்கள் நெஞ்சறிந்த பொய் புகல்கின்றனர்? ஒருக்கால் அதன்மீதுகொண்ட பெருமதிப்பாலா? பக்தியினாலா? அதை நிலைநிறுத்தவேண்டுமென்ற எண்ணத்தாலா?

உண்மையை உணர்வோர், சைவசமயத்திற்குப் பேரிழுக்கையுண்டு பண்ணுவது பெரியபுராணம் என்பதை உணராமலிருக்கமுடியாது. அன்பே சிவம் என்பது உண்மையானால்-அந்த அன்பைப் போதிப்பதே சைவசமயம் என்பது உண்மையானால்-வன்பு நிறைந்ததும் மூடத்தனம் மொய்த்திருப்பதும், தன்மான மழிப்பதுமான செயல்களைச் சைவத்தைப்போதிக்கவந்த—நிலை நிறுத்த வந்த நாயன்மார்களே செய்துகாட்டியதாகவுள்ள பெரியபுராணம், எப்படிப் பெருமையையளிப்பதாகும்? இந்நெறிகள், எவ்வளவுகாட்டுமிராண்டிகள்-அநாகரிக முடையவர்கள் என்பதை மெய்ப்பிக்கின்றன! இதை இக்காலத்திலும் சைவர்கள் புறக்கணிக்காமல்போற்றி வருவது, எவ்வளவு கேவலநிலையையுண்டு பண்ணுகிறது என்பதைச் சிறிது ஆர அமரயோசித்துப்பார்த்தால், உண்மை விளங்காமற்போகாது.

இனியேனும் சைவர்கள்—குறிப்பாகச் சைவப்புலவர்கள், மக்களிடையே அம்மூடக்கதைகளைப் புகுத்தாதிருப்பார்களாக! சைவத்திற்கே பேரிழுக்குவிளைவிக்கும் ஒருநூலைச்சைவர்கள் புறக்கணிக்கமுடியாவிட்டாலும்,சைவர்களின் தன்மானங்கருதிச் சுயமரியாதைக்காரர்கள் மேற்கொண்டுள்ள ஒழிப்புவேலையையாவது அவர்கள் தடைசெய்யாதிருப்பாராக! வேண்டுமானால், பெரியபுராணம் இன்னகாலத்தில் தோன்றியநூல், அதிற் கூறப்படும் நாயன்மார்கள் இன்னின்ன ஆண்டில் தோன்றியவர்கள்; அக்காலத்திற்கேற்பச் சைவத்தொண்டாற்றியவர்கள்; இன்று அம்முறைகள் பயன்படாதவை என்று சரித்திரம் கல்வெட்டு இவற்றை ஆதாரமாகக்கொண்டு ஒருசிறு நூல் எழுதிப், பெரியபுராணம் சவக்குழியைநாடுவதற்கு விடைதந்துவிட்டும், இன்னும், சேக்கிழார் புலமையோ அவர் பெயரோ மறையாதிருக்கவேண்டும் என்று உண்மையிலேயே விரும்புவார்களானால், தன்மதிப்பைப் போக்குவதும், மூடநம்பிக்கையை யூட்டுவதும், சாதி பேதத்தை நிலைநிறுத்துவதுமாகிய இவைபோன்ற இழிவுதரக்கூடிய செய்யுட்களைநீக்கி, நாட்டுவளம், இயற்கை எழில், சோலை, அன்பு, நீதிபோன்ற பகுதிகளை யுணர்த்தும் செய்யுட்களை வரிசைமுறையாக அமைத்துப் "பெரியபுராணச்செய்யுட்டிரட்டு" என்றபெயரோடாவது ஒரு நூல்ஆக்கி, ஏனையபெரியபுராண நூல்களை இல்லாமற்செய்ய முனையட்டும்.

இதைவிட்டு, "இவர்கள் சொல்வதை, நாம் கேட்பதா" என்று தோள்தட்டிப் போருக்கு வருவதானால் அவர்கட்காக நாம் இரங்குவதோடு, அவர்கள்மீது கொண்ட நல்லெண்ணத்தின் காரணமாக அவர்களின் தன்மதிப்பைக்காக்கும் பணியிலிருந்து சுயமரியாதைக்காரர்கள் என்றும் பின்வாங்கிவிடமாட்டார்கள் என்பதையும் வணக்கத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

Edited Printed and Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press,
51-Chairman, Sambasiva Chettiar Street, L. Conjeeveram.